# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2053/04 - 2018 ජනවාරි මස 08 වැනි සඳුදා - 2018.01.08

*2053/04 ஆம் இலக்கம் - 2018 ஆம் ஆண்டு சனவரி மாதம் 08 ஆந் திகதி திங்கட்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

### காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது குறிப்பு இல.: 4/1/5/29.
காணி அமைச்சின் குறிப்பு இல.: 4-3/9/2016/டபிள்யுஎஸ்/332.

ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதான கீழ்க்காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ் நான் இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம் :**

வடமேல் மாகாணத்தின், குருணாகல் மாவட்டத்தில், குருநாகல் பிரதேச செயலாளர் பிரிவில், இல. 832, கங்கொட கிராம அலுவலர் பிரிவில், 1 ஆம் பிரிவு, கங்கொட கிராமத்தில் (குருநதகல், நகர சபை எல்லைக்குள்) அமைந்த, நில அளவை மா அதிபரால் அளந்து தயாரிக்கப்பட்டு 2017.11.10 ஆம் திகதியிடப்பட்ட சுவட்டு வரைபடம் 420371 ஆம் இலக்க மற்றும் வலய இலக்கம் 1 ஆம் படிவத்தில் 4 ஆம் இலக்கம் கொண்ட வரைபடத்தின் காணித்துண்டு இலக்கம் 153 எனக் குறிப்பிடப்பட்டுள்ளது ''குபல் கொட்டுவே வத்த'' என்னும் காணியில் சுமார் 0.0354 ஹெக்டயார் விஸ்தீரணமுடைய கீழ்காணும் எல்லைகளில் அமைந்துள்ள காணித்துண்டு:-

*1.* **துண்டு இல.** *153*

காணியின் பெயர்: ''குபல் கொட்டுவே வத்த''; விஸ்தீரணம்: 0.0354 ஹெக்டயார்.

வடக்கு ஆனந்த ஹமன்கொட மாவத்தை மற்றும் காணித்துண்டு இல. 154,; கிழக்கு காணித்துண்டு இலக்கம் 154 மற்றும் காணித்துண்டு இல. 148; தெற்கு காணித்துண்டு இல. 148 மற்றும் காணித்துண்டு இல. 152; மேற்கு காணித்துண்டு இல. 152; மற்றும் ஆனந்த ஹமன்கொட மாவத்தை

உரிமைகோருபவரின் பெயரும் முகவரியும்

சன்றி எட்வர்டைசிங் சர்விஸஸ் பிரைவேட் லிமிடெட்,
இலக்கம் 301, புத்தளம் வீதி, குருணாகல்.

மேற்குறித்த காணிக்கு உரிமைகோருபவரோ அல்லது வேறு தொடர்புகள் இருப்பதாக கூறும் சகலரும் தாமாகவோ அல்லது அவர்களின் கடிதம் மூலம் அதிகாரம் உள்ளவர்களாகவோ இருப்பின் 2018 பெப்ரவரி மாதம் 26 ஆந் திகதி மு. ப. 10.30 மணிக்கு குருணாகல் பிரதேச செயலாளர் அலுவலகத்தில் என்னைச் சந்திக்க வேண்டும். மேலும், 2018 பெப்ரவரி மாதம் 19 ஆந் திகதிக்கு முன்னர் அக்காணியையோ அல்லது அக்காணிக்கு தொடர்புடைய தத்தமது உரிமைகளின் தன்மைகளையும் அக்காணியை எடுத்துக் கொள்ளுதலுக்கான நாட்டஈடு கோருவதற்குறிய காரணங்கள் பற்றிய விபரங்களையும் நட்டஈட்டுத் தொகை, அத்தொகையை கணக்கீடு செய்த முறையையும் கடிதமூலப் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்க வேண்டும். அவற்றை உரிமைகள் கோரல் பற்றிய ஒப்பனை பரிசீலனைச் செய்யும் போது சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

ஈ. எம். எம். எஸ். ஏக்கநாயக,
பிரதேச செயலாளர்,
குருணாகல்.

பிரதேச செயலகம்,
குருநாகல்,
2018 ஜனவரி மாதம் 03 திகதி,

01 - 594



*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*